# கங்கையும் கடாரமும் கொண்டமை காட்டும் இராஜேந்திரனின் இலச்சினை

**முதுமுனைவர் குடவாயில் பாலசுப்ரமணியன்**
**வரலாற்று ஆசிரியர்**
**தஞ்சை அரண்மனை சுவடிகள் நூலக மேலாளர்(ஓய்வு)**
**தஞ்சாவூர்**

இலச்சினை, இலாஞ்சனம், முத்திரை என்ற சொற்கள் ஒரு குறிப்பிட்ட அடையாளத்தினைக் குறிக்கும் கலை வடிவமாகும். அரசர்களும், தனி நபர்களும் தமக்கெனத் தனித்தனி முத்திரைகளைக் கொண்டு செயல்பட்டனர். ஒரு நாட்டின் இறையாண்மையைக் காட்டி நிற்பதில் இலச்சினையும் ஒன்றாகும். இந்திய வரலாற்றில் சிந்து சமவெளி நாகரீக காலந்தொட்டே இலச்சினைகள் முக்கியத்துவம் பெற்று விளங்கின. ஹர்ஷ சரிதம் என்ற நூல் ஹர்ஷரின் வரலாற்று நிகழ்வு ஒன்றினை சுவைபட எடுத்துக் கூறுகின்றது.

ஹர்ஷர் ஒருமுறை சரஸ்வதி நதிக்கரையில் அமர்ந்திருந்தபோது அவர்தம் அலுவலர்களும், கணக்கர்களும் அவரிடம் வந்து கட்டளைகளைப் பெறக் காத்து நின்றனர். அவ்வமயம் ஹர்ஷரின் முத்திரையான காளை உருவம் பொறிக்கப்பெற்ற பொன்னால் செய்யப்பெற்ற இலச்சினை ஒன்றினை அரசனிடம் தந்தனர். மன்னர் அதனைப் பெற முயலும்போது கை தவறி அம்முத்திரை ஈரத்தரையில் விழுந்தது. பொன் இலச்சினை ஈர மண் தரையில் விழுந்ததால் அதிலிருந்த முத்திரை உருவம் தரையில் பதிந்தது. அருகிலிருந்த அலுவலர்களோ அதனை அபசகுனம் எனக் கருதி வருந்தினர். ஆனால் மன்னனோ, “கோழை மனம்தான் உண்மையினை ஏற்க மறுக்கும். இந்நிலம் முழுவதிலும் என்னுடைய ஒரே ஆணையே நிலவ வேண்டும் என்பதையே இது உணர்த்துகின்றது. உங்களுக்கு அது தோன்றவில்லையே” என்றாராம். ஹர்ஷ சரிதம் கூறும் இந்நிகழ்வு மன்னனின் இலச்சினையின் மகத்துவத்தை உரைப்பதாகும்.

முத்ரா ராக்ஷஸம் என்ற வடமொழி நாடக நூல் மற்றொரு சுவையான நிகழ்ச்சியினைக் கூறுகின்றது. அதில் நந்தர்களின் அமைச்சனான ராக்ஷஸன் ஒரு சமயம் தான் கண்ட தன் முத்திரையுள்ள ஆணை ஓலையொன்றினை மறுக்க இயலாது தவிக்கின்றான். காரணம், தான் இடாத தன் முத்திரை இருப்பதால் அவனால் அந்த ஆணையை மறுக்க இயலவில்லை. முத்திரை அல்லது இலச்சினை என்பது எவ்வளவு முக்கியத்துவம் பெற்ற ஒன்று என்பதனை இந்நூல் எடுத்துரைக்கின்றது.

தமிழக வரலாற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இமயமால் வரையில் தமிழ் மன்னர்கள் பொறித்த இலச்சினைகள் பற்றிய குறிப்புகள் அவர்கள் செய்த மகத்தான சாதனைகளை எடுத்துரைப்பனவாகும். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என்ற சேரமன்னன் இமயம் வரை சென்று தன் வில் சின்னத்தை அங்கு பொறித்தான் என்பதை, “விடர்ச்சிலை பொறித்தவன்” என்று தொல் நூல்கள் குறிப்பிடுகின்றன. பதிற்றுப்பத்தில் ஆசிரியர் துவன்றிய

பேரிசை இமயம் வென்றவனாக குமட்டூர் கண்ணனார் என்ற புலவரால் அவன் குறிக்கப்பெறுகின்றான். பரணர் என்ற சங்கப் புலவர், "ஆரியர் அலறத் தாக்கிப் பேரிசை தொன்று முதிர் வடவரை வணங்குவில் பொறித்து வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்"[1] என்று கூறி சேரமன்னன் இமயமலை மீது தன் வில் சின்னத்தைப் பொறித்தான் என்பதை உறுதி செய்துள்ளார்.

திருமாவளவன் எனப் பெறும் கரிகாற்சோழன் இமயமலைமீது தன் புலிச் சின்னத்தைப் பொறித்தான் என்பதை சிலப்பதிகாரம், கலிங்கத்துப்பரணி போன்ற தமிழ் நூல்கள் தெளிவுற எடுத்துரைக்கின்றன. சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் திருக்குறிப்புத் தொண்டர் வரலாறு கூறும்போது, "இலங்குவேற் கரிகாற் பெருவளத்தோன் வண்திறல் புலி இமயமால் வரை வைக்க வெகுவோன்" என்று கூறி, அப்பேரரசன் இமயமலையின்கண் தன் புலி இலச்சினையைப் பொறித்த வரலாற்றை உறுதி செய்துள்ளார்.[2] சங்க கால பாண்டியர்களும் இமயத்தில் அவர்கள்தம் மீன் இலச்சினையைப் பொறித்த பெருமையினைப் பலவாறாகப் பதிவு செய்துள்ளனர். "பருப்பதத்து கயல் பொறித்த பாண்டியர் குலபதி" என பெரியாழ்வார் தம் பாசுரத்தில் கூறியுள்ளார்.[3]

மூவேந்தர்களும் தத்தம் இலாஞ்சினைகளை இமயத்தில் பொறித்தமை பற்றி தனித்தனியே பேசப்பெற்றாலும், "இமயநெற்றியில் விளங்கு விற்புலி கயல் பொறித்த நாள்" எனச் சிலப்பதிகாரத்தின் உரை பாட்டுடை மாடையில் இளங்கோவடிகள் கூறியுள்ளமையால் மூவேந்தர்களும் ஒன்றிணைந்தே இமயமலையின்கண் வில், புலி, கயல் ஆகிய இலச்சினைகளைப் பொறித்தனர் என்பதறியலாம்.

தமிழகத்து மூவேந்தர்களின் சங்க கால காசுகளை நோக்கும்போது ஒரு வில்லும், அதன் நடுவே திகழும் அம்பும் சேரர்களின் இலச்சினையாகவும், இரு மீன்களின் உருவங்கள் பாண்டியர்களின் இலச்சினையாகவும், ஒரு காலை உயர்த்திய நிலையில் நிற்கும் புலி சோழர்தம் இலச்சினையாகவும் இருந்தன என்பதறியலாம். பிற்காலத்தில் இந்த இலச்சினைகளில் சிறுசிறு மாற்றங்கள் ஏற்பட்டன.

விஜயாலய சோழனால் தோற்றம்பெற்ற பிற்கால சோழ மரபினரின் ஆட்சி கி.பி. 846இல் உதயமாயிற்று. நானூற்று முப்பத்து மூன்று ஆண்டுகள் அது நிலைபெற்றது. சேரநாடும், பாண்டி நாடும் அவர்தம் வசமாயின. அதனால் சோழர்களின் இலச்சினைகளில் அமர்ந்த நிலையில் உள்ள புலியோடு இணை கயல்களும், வில்லும் இணைந்து நிலைபெற்றன. சோழர்தம் அரச இலச்சினைகள் அவர்கள் வெளியிட்ட செப்பேட்டுத் தொகுதிகளின் ஏடுகளை இணைக்கும் வளையங்களில் தனித்ததொரு பகுதியாகக் காணப்பெறுகின்றன. வேலஞ்சேரி செப்பேட்டில் பராந்தக சோழனின் இலச்சினையும், அன்பில் செப்பேட்டில் சுந்தர சோழனின் இலச்சினையும், காஞ்சிபுரத்து செப்பேட்டில் உத்தம சோழனின் இலச்சினையும் உள்ளன. ஆனைமங்கலம், புத்தூர், திருவாலங்காடு, எசாலம் ஆகிய இடங்களில் கிடைத்த செப்பேடுகளில் இராஜேந்திர சோழனின் இலச்சினையும், கழுக்கணில் முட்டத்தில் கிடைத்த செப்பேட்டில் இராஜாதிராஜனின் இலச்சினையும், சாராலா செப்பேட்டில் வீரராஜேந்திரனின் இலச்சினையும், சிறிய ஆனைமங்கலச் செப்பேட்டில் முதற்குலோத்துங்கனின் இலச்சினையும் உள்ளன.

இங்கு குறிப்பிடப்பெறும் சோழர் இலச்சினைகள் பத்தினையும் கூர்ந்து நோக்கும்போது வேலஞ்சேரி, அன்பில், கச்சிப்பேடு, திருவாலங்காடு, சாராலா (மதுராந்தகம்), சிறிய ஆனைமங்கலம் ஆகிய ஆறு செப்பேட்டு இலச்சினைகளில் ஒரு வட்டத்திற்குள் கீழாக கிடைமட்டத்தில் வைக்கப்பெற்ற வில்லும் அதற்கு மேலாக வஸ்திரம் கட்டி அழகுபடுத்தப்பெற்ற எரிகின்ற குத்துவிளக்குகள் இருபுறம் அணிசெய்ய இடையே இரண்டு மீன்களும், வாலை மேலே உயர்த்தி அமர்ந்த நிலையில் உள்ள புலியும் காணப்பெறுகின்றன. இச்சின்னங்களுக்கு மேலாக நடுவே கொற்றக்குடையும் இருமருங்கும் இரு சாமரங்களும் உள்ளன. வட்டக்கோட்டிற்கு வெளிப்புறம் உள்ள கோட்டினை ஒட்டி இலச்சினையின் விளிம்பில் சுழல் நிலையில் கிரந்த எழுத்துகளில் வடமொழியில் அமைந்த எழுத்துகள் காணப்பெறுகின்றன. சோழ அரசர்கள் இந்திய நாட்டின் பெரும்பகுதிகளையும், கீழ்த்திசை நாடுகளையும் வென்றவர்கள் என்பதாலும், தொடர்ந்து பன்னாட்டு உறவுகளை மேற்கொண்டொழுகியவர்கள் என்பதாலும், அனைத்து தேசங்களுக்கும் பொதுமொழியாக விளங்கிய வடமொழியில் தங்கள் இலச்சினை வாசகங்களை அமைத்தனர். இருப்பினும் வடமொழிக்கெனத் தமிழர்கள் உருவாக்கியதும், தமிழர்களுக்கே சொந்தமானதுமான கிரந்த எழுத்துகளிலேயே அந்த வாசகங்களைப் பொறித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இராஜாதிராஜ சோழனின் கழுக்காணி முட்டத்துச் செப்பேட்டுத் தொகுதியில் மட்டும் இலச்சினையின்கண் சேரர்தம் வில் சின்னம் படுக்கை வசத்தில் இல்லாமல் குத்து வசத்தில் புலி, கயல்களோடு இணைந்தே காணப்படுகின்றது. இவ்விலச்சினையில் வட்டக்கோடும் இடம்பெறவில்லை.

இலச்சினை வாசகங்களில் அந்தந்த சோழ மன்னர்களின் பெயர்களும், அறக்கூற்றுகளும், அது அக்குறிப்பிட்ட மன்னனின் சாசனம் என்றும் கூறப்பெறுகின்ற வாசகமும் காணப்பெறுகின்றன. இராஜேந்திர சோழனின் நான்கு செப்பேட்டு இலச்சினைகளும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவையாகும். ஆனைமங்கலச் சாசனம் தன் தந்தை இராஜராஜ சோழனின் ஆணையைக் குறிப்பதாயினும் அவன் தந்தை காலத்திற்குப் பிறகு இம்மன்னவனால் வெளியிடப்பெற்றதாகும். அதனால்தான் அதில் தன் இலச்சினையைப் பொறித்துள்ளான். இருப்பினும் அதில் தன் முன்னவர்கள் போற்றிய அதே வகையில் இலச்சினைச் சின்னங்களை அமைத்து, அதில் ''ராஜத் ராஜன்ய மகுட ஸ்ரேணி ரத்னேஷு சாசநம் இதி ராஜேந்திர சோளஸ்ய பரகேசரி வர்மண'' என்ற கிரந்த எழுத்துப் பொறிப்புகளை இடம்பெறுமாறு செய்துள்ளான். ''அரசர்களின் மகுடங்களின் வரிசையிலுள்ள ஒளிரும் இரத்தினங்களில் திகழ்வதான இது பரகேசரி வர்மரான இராஜேந்திர சோழனின் சாசனமாகும்'' என்பதே இச்சுலோகத்தின் பொருளாகும்.

இராஜேந்திர சோழனின் நேரிடையான ஆணைகளைக் காட்டி நிற்கும் திருவாலங்காடு, புத்தூர் (கரந்தை), எசாலம் செப்பேட்டுச் சாசனங்களில் இடம் பெற்றுள்ள இலச்சினைகளில் மட்டும் அவன் பெற்ற வெற்றிகளுக்குரிய சின்னங்களும் இடம்பெற்று தனிச்சிறப்புடையவைகளாகத் திகழ்கின்றன. திருவாலங்காட்டு செப்பேட்டு இலச்சினையில் உள்ள சாசனச் சுலோகத்தில் ஸ்வஸ்திஸ்ரீ என்ற மங்கலச் சொற்றொடர் தொடக்கத்தில் இடம்பெற்றுள்ளது. மேலே கொற்றக்குடையும், இணை சாமரங்களும் திகழ, வில்லின் நாண்மீது நடுவே புலியும், இரு மீன்களும் இடம்பெற்றுள்ளன. அவைகளுக்கு இருபுறமும்

குத்துவிளக்குகள், ஈட்டிகள், செங்கோல்கள், அங்குசங்கள் உள்ளன. படுக்கை வசத்தில் உள்ள வில்லின் ஊடே மத்தளம், முக்காலியின்மீது சங்கு, தோரணவாயில், அதன்கீழ் தாமரை, பன்றி, ஸ்வஸ்திகம் ஆகியவை உள்ளன. தாமரை, ஸ்வஸ்திகம், மத்தளம் ஆகியவை மங்கலச் சின்னங்களாகும். தோரணவாயில் கடாரத்து வெற்றியையும், சங்கிலுள்ள நீர் கங்கை வெற்றியையும், முக்காலி மீதுள்ள சங்கு ஈழத்து வெற்றியையும், பன்றி மேலைச்சாளுக்கிய நாட்டு வெற்றியையும் குறிப்பிடும் சின்னங்களாகும்.

புத்தூர் செப்பேட்டுத் (கரந்தை செப்பேடுகள்) தொகுதியில் அமைந்த இராஜேந்திர சோழனின் இலச்சினையின் விளிம்பில் அமைந்த சாசனச் சுலோகங்களுக்கு நடுவே சின்னங்கள் காணப்பெறுகின்றன. கொற்றக்குடை இணை சாமரங்கள் ஆகியவைகளுக்குக் கீழாக நடுவே புலி கயல்கள் திகழ, அவைகளுக்கு இருபுறமும் ஒத்த வடிவில் அமைந்த குத்துவிளக்குகள், செங்கோல் ஆகியவை இடம்பெற்றுள்ளன. ஒருபுறம் செங்கோலினை அடுத்து உரையிடப்பெற்ற குத்து வாளும் அங்குசமும் திகழ மறுபுறம் உழவாரம் உள்ளது. படுக்கை வசத்தில் உள்ள வில்லின் ஊடே மத்தளம், முக்காலிமீது அமைந்த சங்கு, பன்றி, ஸ்வஸ்திகம் ஆகியவை ஒரு வரிசையிலும், கீழே அலர்ந்த தாமரை மலரும் காணப்பெறுகின்றன. இவ்விலச்சினையில் தோரணவாயில் இடம்பெறவில்லை.

இராஜேந்திர சோழனின் 25ஆம் ஆட்சியாண்டில் (கி.பி. 1037இல்) வெளியிடப் பெற்ற எசாலம் செப்பேட்டுத் தொகுதியின் இலச்சினை ஒரு தனிச்சிறப்புடையதாகும். இந்த இலச்சினையில் வட்டக்கோடு இடம்பெறவில்லை. வட்ட முத்திரையின் விளிம்பினை ஒட்டி இராஜேந்திர சோழனின் சாசனம் எனக் குறிப்பிடும் கிரந்த எழுத்தில் அமைந்த வாசகம் sஇடம்பெற்றுள்ளது. முத்திரையின் மேற்புறம் நான்கு திக்குகளைக் குறிக்கும் கூர்முனைகளுடன் உள்ள ஆணைச்சக்கரம் உள்ளது. அதற்கு வலப்புறம் ஸ்வஸ்திகமும், இடப்புறம் மேகத்திரளும் உள்ளன. ஆணைச்சக்கரத்திற்குக் கீழாகக் கொற்றக்குடையும், இணை சாமரங்களும் இடம்பெற்றுள்ளன. அழகிய வில்லின்மீது அமர்ந்த கோல புலியும், இரு மீன்களும் இடம்பெற, அவற்றின் இருமருங்கும் சில சின்னங்கள் காணப்பெறுகின்றன. ஒருபுறம் வஸ்திரம் கட்டப்பெற்ற குத்துவிளக்கு, தரையில் மேல்நோக்கியவண்ணம் வைக்கப்பெற்ற வாள், கொற்றக்கோல், அங்குசம், கவைக்கோல் ஆகியவையும் உள்ளன. படுக்கை வசத்தில் உள்ள வில்லிற்குக் கீழாக தோரணவாயில், பன்றி, முக்காலி மீதுள்ள சங்கு ஆகிய வெற்றிச் சின்னங்கள் இடம்பெற்றுள்ளன.

எசாலம் செப்பேடு இலச்சினை இராஜேந்திர சோழனின் ஆற்றலின் உச்சகட்ட வெளிப்பாட்டைக் காட்டி நிற்பதாக உள்ளது. திருமழபாடி திருக்கோயிலில் இராஜேந்திர சோழனின் தலைமகன் இராஜாதிராஜன் பொறித்துள்ள கல்வெட்டு சாசனத்தில் "வடதிசை கங்கையும் தென்திசை இலங்கையும் குடதிசை மகோதையும் குணதிசை கடாரமும் தண்டினில் கொண்ட தாதை தன் மண்டல வெண்குடை நிழலே தன் குடைநிழல்..." எனக் குறிக்கப்பெற்றுள்ளது. வடக்கில் கங்கை, தெற்கில் இலங்கை, மேற்கில் மகோதை எனப்பெறும் கேரள நாட்டு கொடுங்கோளூர், கிழக்கில் மலேசிய நாட்டு கடாரம் வரை வென்று ஒரு குடையின்கீழ் தன் ஆட்சியை விரிவு செய்தவன் தன் தந்தை இராஜேந்திர சோழன் என்பதை அவன் மகன் இராஜாதிராஜன் பெருமையுடன் பதிவு செய்துள்ளான். இந்த நான்கு திசைகளிலும் அவன் ஆணைச்சக்கரம் சுழன்றது என்பதனை இந்த இலச்சினையில் உள்ள

சக்கரமும் ஸ்வஸ்திகமும் கொற்றக்குடையும் உணர்த்தி நிற்கின்றன. அவன் விண்ணக கங்கையான மண்ணக கங்கை நீரை வங்காளதேசம் வரை வென்று தன் தலைநகருக்கு கொண்டு வந்தவன் என்பதைக் காட்டுவதே இலச்சினையில் உள்ள மேகத்திரளும், சங்கிலுள்ள நீருமாகும். இரு கயல்களும், வில்லும், பாண்டி நாடும், சேரநாடும் கொண்டவன் என்பதைக் காட்டுவனவாகும். அவர்கள் தம் வாளும், செங்கோலும் இன்னபிற சின்னங்களும் இராஜேந்திரனுக்கே உரியவை என்பதை நடுவரிசை உருவங்கள் காட்டி நிற்கின்றன. கீழே உள்ள முக்காலியும் சங்கும் ஈழநாட்டு வெற்றியையும் குறிப்பனவாகும்.

இவ்விலச்சினையில் காணப்பெறும் தோரணவாயில் கடாரத்து அரண்மனையிலிருந்து அவன் கைப்பற்றிய வெற்றிச் சின்னமாகும். இராஜேந்திர சோழனின் மெய்க்கீர்த்தியில் கங்கை வெற்றியைக் குறிப்பிட்ட பிறகு அலைகடல் நடுவே பல மரக்கலங்களை அனுப்பி தன் படையினரின் வெற்றியால் கடாரத்து அரசன் சங்கிராம விசையோத்துங்க வர்மனின் அரண்மனையைக் கைப்பற்றியதோடு அங்கிருந்து தோரணவாயிலையும், இன்னபிற பொருள்களையும் வெற்றிச் சின்னங்களாகத் தமிழகத்திற்கு கொணர்ந்த செய்தி குறிக்கப்பெற்றுள்ளது.

இராஜராஜ சோழனின் ஆட்சிக்காலத்திலும் தன்னுடைய ஆட்சிக் காலத்திலும் எண்ணற்ற நாடுகளை இராஜேந்திர சோழன் வெற்றிகொண்டபோதிலும், அவன் உவந்து ஏற்றுக்கொண்ட பட்டங்கள் கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் என்பவையேயாகும். அதனால்தான் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் அவன் புகழினைக் கூறுமிடத்து, ''தண்டு ஏவி கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு புரந்த கற்பகம்'' என்றும், ''கங்காநதியும் கடாரமும் கைக்கொண்டு சிங்காதனத்து இருந்த செம்பியர்கோன்'' என்றும் மூவருலாவில் குறிப்பிட்டுள்ளார். இவையனைத்தையும் கலைவடிவில் காட்டி இராஜேந்திர சோழனின் மாட்சிமையை எடுத்துரைக்கும் இலச்சினைதான் விழுப்புரம் மாவட்டத்து எசாலம் கோயிலில் புதையுண்டு கிடைத்த செப்பேட்டுச் சாசனத்தின் எழிலார் முத்திரையாகும்.

**சான்றெண் விளக்கம்**


1. அகநானூறு, பாடல் எண். 396
2. பெரியபுராணம், திருக்குறிப்புத் தொண்டர், பாடல் எண். 85
3. பெரியாழ்வார் திருமொழி - 5, 4 : 7










